தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்
பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.
தலைமை இடம் - சென்னை.

| | | |
|---|---|---|
| **K.**சந்திரசேகரன் | **R.**சந்திரசேகரன். | **E.**சித்தையன் |
| தலைவர் | பொதுச்செயலாளர் | நிதிச்செயலாளர் |

**சுற்றறிக்கை எண்: 15/2018** 07-10-2018

அன்புடையீர்,

வணக்கம். 11–09–2018 அன்று பொதுச் செயலாளரால் அனுப்பப்பட்ட பொதுக்குழு அழைப்பிதழில் தெரிவித்திருந்தபடி எதிர்வரும் 14–10–2018 அன்று திருச்சியில், 2018–2019–ம் ஆண்டிற்கான மத்திய சங்கப் பொறுப்பாளர் தேர்தல் நடைபெறவுள்ளது.

மத்திய சங்கப் பொறுப்பாளர் தேர்தலுக்கு போட்டியிடுவோரின் முழுவிவரங்களும் சங்கத்தின் 24–09–2018 சுற்றறிக்கை எண்: 14–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட தேர்தலில் போட்டியிடுபவர்கள் பிரச்சாரங்கள் மேற்கொண்டு மாநில முழுவதுமுள்ள பொதுக்குழு உறுப்பினர்களின் ஆதரவை திரட்டி வருகிறார்கள். அரசியல் கட்சிகள், இதர தொழிற்சங்கங்கள் மற்றும் பிற அமைப்புகள் கண்டு வியக்கும் வண்ணம் தேர்தல் பணிகளும், பிரச்சாரமும் அமைதியாக, கண்ணியமான முறையில் நடந்து வருவதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இதே போன்றதொரு சூழ்நிலை மேலும் ஒரு வார காலத்திற்கு நீடித்து தேர்தல் சுமூகமாக நடைபெற்றிட அனைவரும் தங்களது ஒத்துழைப்பையும், ஆதரவையும் நல்கிடுமாறு வேண்டுகிறோம்.

பொதுச்செயலாளர் உறுப்பினர் நலன்களுக்கான தனது கடமைகளை செய்திட, சென்னையில் இருக்க வேண்டிய கட்டாயம் உள்ளதால் அவரால் பிரச்சாரத்திற்கு ஒரு சில இடங்கள் மட்டுமே செல்ல முடிகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

❖ மின்சாரத் தொழிலாளர்களின் 2017–2018–ம் ஆண்டிற்கான ‘போனஸ்’ குறித்து தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை எதிர்வரும் 11–10–2018 அன்று முற்பகல் நடைபெறவுள்ளது.

இவ்வாண்டு ‘போனஸ்’ வழங்குவதற்கு சம்பளம் ரூ.21,000/– என்று எடுத்துக் கொள்ள அரசு உத்தரவிட்டுள்ளதாகவும் அதனால் ரூ.50,000/–க்கு மேல் போனஸ் கிடைக்கும் என்றெல்லாம் தவறான செய்தி தொழிலாளர்கள் மத்தியில் பரப்பப்பட்டு வருகிறது. இச்செய்திகள் உண்மையல்ல. 1965 போனஸ் சட்டப்பிரிவு 2(13)ன்படி போனஸ் பெறும் உரிமை, ரூ.10,000/– வரை, மாதசம்பளம் பெறும் தொழிலாளர்களுக்கு மட்டுமே, என்றிருந்ததை மாற்றி மாதசம்பளம் ரூ.21,000/– வரை என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது. மற்றபடி போனஸ் தொகை கணக்கிட மாதசம்பளம் ரூ.7,000/– மட்டுமே எடுத்துக் கொள்ளப்படும். இதில் எந்த மாற்றமும் சட்டத்தில் இதுவரை செய்திடவில்லை. இதன்படி பார்த்தால் சென்ற ஆண்டு தொழிலாளர்கள் பெற்ற 8.33 சதவீத போனஸ் + 11.67 கருணைத்தொகை ஆக மொத்தம் 20 சதவீதம், ரூ.16,800/– போனஸ் மட்டுமே தான் கிடைக்கும் என்ற நிலை உள்ளது. இருப்பினும் ஒவ்வொரு ஆண்டும் போனஸ் வழங்குவதற்குமுன் தொழிற்சங்கங்களின் கருத்துக்களை மின்வாரியம் கேட்பது வழக்கம். இந்த சம்பிரதாயப்படிதான் வருகிற 11–ம் தேதி பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டுள்ளோம். அனேகமாக அனைத்து சங்கங்களின் சார்பில் 25 சதவீத போனஸ் வழங்க வலியுறுத்தப்படும்.

❖ கணக்கீட்டாளர் 2–ம் நிலை பொறுப்பும், கணக்கீட்டாளர் பொறுப்பும் மெர்ஜ் செய்யப்பட்டதால் பதவி உயர்வின் மூலம் நியாயமாக கிடைக்கக்கூடிய ஆண்டுயர்வுப்பலன் இவர்களுக்கு கிடைக்காமல் போய்விட்டது. இதன் மீது சங்கங்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாக மெர்ஜர் செய்யப்பட்டாலும், ஆண்டுயர்வு வழங்கிட, வாரிய நிர்வாகம் கொள்கை அளவில் ஒப்புக்கொண்டுள்ளது. இதற்கான உத்தரவு விரைவில் வெளியாகும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

❖ பட்டம் பயின்றவர்களை உள்முகத் தேர்வு மூலம் இளநிலை உதவியாளராக தேர்வு செய்யப்படுவதற்கு, தேவைப்படும் ONLINE விண்ணப்பங்கள் வடிவமைத்திடும் மென்பொருள் (software) தயார் செய்யும் வேலை நடைபெற்று வருகிறது. விரைவில் பணியாளர்களிடமிருந்து உள்முகத் தேர்வுக்கான விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளது.

❖ சமீபத்தில் வெளியிடப்பட்ட மூன்றாண்டு, காலமாறுதலில் திரு.சரவணன், உதவி கணக்கு அலுவலர் அவர்கள் வேலூர் மத்திய அலுவலகத்திற்குள்ளேயே ஆகஸ்ட் திங்களில் மாற்றம் செய்யப்பட்டு, பணியிலும் சேர்ந்து விட்டார். இருப்பினும் வேறு ஒரு உதவி கணக்கு அலுவலருக்கு மத்திய அலுவலகத்தில் நியமனம் கொடுப்பதற்காக மறுபடியும் இவர் 40 கி.மீ. அப்பால் உள்ள சோளிங்கர் வருவாய் பிரிவிற்கு செப்டம்பர் திங்களில் மாற்றம் செய்யப்பட்டதை இரத்து செய்து தரும்படி வேலூர் வட்டச் செயலாளர், மத்திய சங்கத்திடம் கோரிக்கை வைத்தார். உடனடியாக CE/P–யிடம் பேசி, மாறுதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இரத்து செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

❖ இதேபோல், 1982–ம் ஆண்டு கணக்காளராக சேர்ந்த நாளிலிருந்து நாமக்கல்லில் நமது சங்க தீவிர உறுப்பினர் திரு.செல்வராஜ். RS பதவியிருந்து ATO பதவி உயர்வில் கரூர் வட்டத்தில் சேர்ந்து பணிபுரிந்து வரும் இவர் எதிர்வரும் 31.12.2018–ல் ஓய்வு பெறவுள்ள நிலையில், காலமாறுதல் உத்தரவால் கரூர் புறநகரிலிருந்து கரூர் நகரத்திற்கு மாற்றப்பட்டார். இம்மாறுதலை இரத்து செய்து தர வேண்டி ஈரோடு மண்டல செயலாளர் திரு.B.கோபாலகிருஷ்ணன் அவர்கள் 24.09.2018–ல் மத்திய சங்கத்திற்கு கோரிக்கை வைத்துள்ளார். மத்திய சங்கத்தின் உடனடி நடவடிக்கையால் மாறுதல் உத்தரவு சில தினங்களில் இரத்து செய்யப்படவுள்ளது.

**14.10.2018 அன்று திருச்சி பொதுகுழுவில் நடைபெறும் தேர்தலின் போது அனைவரையும் சந்திக்கிறோம்.**

**வாழ்த்துக்கள்**

தோழமையுள்ள,

பொதுச்செயலாளர்

பெறுநர்: கிளைச் செயலாளர்கள்,
வட்டச் செயலாளர்கள்,
மண்டலச் செயலாளர்கள்,
மற்றும் மத்திய சங்க பொறுப்பாளர்கள்.

நகல் : செய்தி மடல்.